நாள். 12.06.2026
அசல் வழக்கு எண்.74/2025
வா.சா. 1 நம்பி
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

தாவா சொத்தும் நான் வீடு கட்டியுள்ள சர்வே எண் 174/4 நத்தம் நிலவகைபாட்டை சார்ந்தது என்றால் சரிதான். நத்தம் நிலத்தில் அனுபவத்தில் இருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். தாவா சொத்தில் வடபக்கத்தில் உள்ள ஓட்டு வீடு என் தந்தை ஆறுமுகம் காலத்திலிருந்தே உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் என் தந்தை இறுதி வரை வாழ்ந்தார் என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் 1 என்றால் சரிதான். நான் புதியதாக கிழமேல் ரோட்டிற்கு வடபுறம் கட்டியுள்ள வீட்டின் கதவு எண் 2ஏ/1 என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன்.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடையாள அட்டையில் கதவு எண் 1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது பிராதில் 3 ம் பக்கத்தில் எனக்கு கிடைத்த வட பாகத்தில் வீடு கட்டியுள்ளேன் என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபாகத்தில் நான் குடியிருப்பதை காட்டும் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரசீது தாக்கல் செய்துள்ளேன். 1 ம் பிரதிவாதி 2010 ம் ஆண்டில் அவர் பெயருக்கு ஏற்பட்ட பட்டா தெரியுமா என்றால் தற்போது தான் தெரியும். நான் வடபாகத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. எனது தம்பி கொம்பையா கட்டியுள்ள வீட்டிற்கு மேல்பக்கம் பேச்சிமுத்து என்பவரின் உறவினர்கள் இடம் என்றால் சரிதான், பேச்சிமுத்து சகோதரரின் இடம் ஆகும்.

எனது தந்தை ஆறுமுகத்திற்கு தபசில் சொத்து மட்டும் உள்ளதா இல்லை வேறு இடங்கள் உள்ளதா என்றால் வேறு இடங்களும் உள்ளது. எனது தாத்தா பெயர் கொம்பையா தேவர். எனது தாத்தா 1980 ல் 8 சென்ட் நிலம் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் புதியதாக கட்டியுள்ள கிழமேல் ரோட்டிற்கு வடபுறம் உள்ள வீடு யாருடைய இடம் என்றால் என் தந்தை எனக்கு தந்தது. சர்வே எண் 174/4, 174/5 ல் 12

சென்ட் நிலம் எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் 10 சென்ட் நிலம் உள்ளது. கொம்பையா தேவர் கிரையம் பெற்ற 8 சென்ட்டும் சர்வே எண் 174/4, 174/5 12 சென்ட்டையும் சேர்த்து எனக்கு 4 சென்ட், எனது சகோதரிகள் லெட்சுமி, மாரியம்மாள் தலா 4 சென்ட்டும் ஒதுக்கினார்கள் என்றால் சரியல்ல.

எனது தந்தை என் சகோதரி மாரியம்மாளுக்கு 4 சென்ட் இடம் ஏற்பாடு செய்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல, 1 ½ சென்ட் நிலம் தான் கொடுத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அது **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தந்தை கொ. ஆறுமுக தேவர் என கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய தந்தையின் கையொப்பம் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 16.12.2005 தேதியிட்ட ஒத்தி பணபற்று ரசீதில் உள்ள கையொப்பம் எனது தந்தையின் கையொப்பம் என்றால் இல்லை. கைரேகை நிபுணரிடம் கைரேகை ஒப்பீடு செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 சென்ட். எனது வழக்கு படி எனக்கும் எனது சகோதரருக்கும் தலா 5 சென்ட் என்றால் சரிதான். அதைபோல் சர்வே எண் 174/4 மற்றும் 174/5 ல் உள்ள 10 சென்ட் நிலத்தில் எனது சகோதரருக்கு 5 சென்ட் உள்ளது என்றால் சரியல்ல, அது எனக்கு உரிய தனி இடம். எனது சகோதரரிகளுக்கும் எனக்கும் ஒதுக்கப்பட்ட இடத்தை சேர்த்து நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புறம் பேச்சிமுத்து என்பவரிடமிருந்து 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது போலியான கிரைய ஆவணம். எனது வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ள வாய்மொழி பாகம் எப்பொழுது யார் முன்னிலையில் ஏற்பட்டது என கூறாததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை.

வாய்மொழி பாகம் எதுவும் தாவா சொத்தை பொறுத்து ஏற்படவில்லை என்றாலும் ஆரம்பத்திலிருந்து தபசில் சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.